IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO: 31/2017

**DEP OF WITNESS: DW1**

NAME: Pownammal RELIGION: Hindu

FATHER NAME: ChinnaiyaGounder CASTE:Gounder

VILLAGE: K.Mottur OCCUPATION:கூலி

TALUK:Gudiyattam AGE:62

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 26.02.2019

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:-**

எனக்கு தற்பொழுது 62 வயதாகிறது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனது கணவர் பெயர் நாகப்பன். எனது கணவருடன் பிறந்தவர்கள் 3 பேர். நாகப்பன் 1, குப்பகவுண்டர் 2, முனிராஜ் 3 ஆகியோர்கள் ஆவார்கள் அவர்களுடைய தகப்பனார் பெயர் சின்னசாமி அவர் எனது மாமனார் ஆவார். சின்னசாமியின் தகப்பனார் பெயர் குள்ளப்ப கவுண்டர் என்றால் சரிதான். எனக்கு 2 பிள்ளைகள். சாந்தகுமாரி 1, சோமசுந்தரம் 2 ஆவார்கள். இந்த வழக்கை குறித்து முழுவிவரம் தெரியுமா என்றால் தெரியும். வழி பாதை குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா மாதிரி வரைபடத்தில் உள்ள எ செட்டில் சொத்தான சர்வே எண்.253/4ஜி சொத்தானது வாதி நடராஜனுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா பாதையான தாவா பி செட்டியூல் சொத்தானது யாருக்கு சொந்தமானது என்றால் அது வனத்துறைக்கு சொந்தமானது. வாதி எனது மூத்தார் குப்பகவுண்டர் என்பவரின் மகன். நாங்கள் எல்லோரும் ஒரே பங்காளிகள் என்றால் சரிதான். தாவா வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சர்வே எண்.253/4இ சொத்தானது எங்களுக்கு சொந்தமான காலி இடம். அந்த காலி இடத்திற்கும், நடராஜனுடைய இடத்திற்கும் இடையில் உள்ள சர்வே எண்.253/4எப் காலி இடமானது முனிராஜிக்கு சொந்தமானது. அந்த முனிராஜியிடமிருந்து நான் அதை கிரயம் பெற்றுள்ளேன். அந்த முனிராஜ் எனக்கு மூத்தார் உறவு முறை. 2004-ம் ஆண்டில் பஞ்சாயத்து தலைவரிடமும், வட்டார வளர்ச்சி அலுவலரிடமும் வழிபாதை குறித்து பேச்சு வார்த்தை நடத்தினோம். அந்த பேச்சுவார்த்தையில் எனக்கு வழிவிடமுடியாது என்று சொல்லிவிட்டார்கள் அதனால் நான் கோர்ட்டில் கேஸ் போட்டேன். அந்த வழக்கு அ.வ.எண்.754/2004 ஆகும். நான் அந்த வழக்கை வழி பாதை வேண்டும் என்று தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த வழக்கில் இந்த வழி

sd/-pownammal

பாதையை காட்டும் வகையில் மாதிரி வரைபடம் ஒன்றை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மாதிரி வரைபடத்தில் தாவா வரைபடத்தில் இந்த வழக்கின் வாதி நடராஜனின் வீட்டை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்கிலும் இந்த தாவா வழிபாதையை பி செட்டியூல் சொத்தாக தான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழிபாதை அமைந்துள்ள சொத்தின் சர்வே எண்.253/3 என்றால் சரிதான். அந்த வழிபாதையின் வழியாகத்தான் இந்த வழக்கின் வாதியும் அவருடைய வீட்டிற்கு வந்துசெல்கிறார் என்றால் இல்லை. அந்த வழிபாதையானது குடியாத்தம் - சித்தூர் செல்லும் கீழ்புறம் நோக்கி வருகிறது என்றால் சரிதான். அந்த வழிபாதை பொது வழி பாதை என்றால் இல்லை. அந்த வழிபாதையை ஒட்டி எனது வீட்டிற்கு வடக்கு புறத்தில் பெருமாள் என்பவருடைய வீடு உள்ளது என்றால் சரிதான். இந்த பொது வழி பாதையில் பெருமாள், வாதியும் இன்னும் அந்த பக்கத்தில் உள்ள நிலத்துக்காரர்களும் அவர்களுடைய நிலத்திற்கும், வீட்டிற்கும் சென்றுவருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கில் எங்களுக்கு சொந்தமான சொத்துக்களுக்கு நாங்களும், எங்களது முன்னோர்களும் 100 வருடங்களுக்கு மேலாக பொது வழியாகத்தான் பயன்படுத்தி அனுபவித்து வந்தோம் என்று சொல்லி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை தவிர இந்த வழக்கிற்கு சம்மந்தப்படாத வேறு சில சங்கதிகளையும் சேர்த்து எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த தாவா பொது வழி பாதையில் பெருமாள் இடத்தை வாங்கிய நபர்களான ராஜீவ்காந்தி, சரஸ்வதி, மோகன், கோவிந்தசாமி ஆகியோர்கள் அந்த வழிபாதையை பாதை வழியாக யாரும் செல்லமுடியாத வகையில் உடைந்த செங்கல்களை கொண்டு வந்து கொட்டி மேடாக்கிவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு செங்கல்லை கொட்டி சம்மந்தமாக எடுக்கப்பட்ட போட்டோ தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 4 போட்டோ நகல்கள் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டது. அது சம்மந்தமாக நானும், செல்வகுமார் என்பவரும் தனிதனியாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் போலிசார் அந்த வழியில் செல்வோரை தடுக்கக்கூடாது என்று தெரிவித்து அவர்களை அனுப்பிவிட்டார்கள். நான் சொல்வது போல கூட்டுறவு சுசைட்டியை ஒட்டி ஒரு வழி பாதை உள்ளதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கில் தாவா வழிபாதையை தவிர வேறு வழி பாதையே கிடையாது என்று தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றும் இந்த நிலையில் தாவா பாதையை தவிர வேறு ஒரு வழி பாதை உள்ளதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதனால் தாவா பி செட்டியூல் சொத்தானது பொது வழி பாதை என்றும் அதில் வாதியும் சென்று வர சட்டப்படி உரிமை உள்ளது என்றும் அதை தடுக்க

sd/-pownammal

எனக்கு எவ்வித அருகதையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா பொது பாதையானது வனத்துறைக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை இன்றைய நாள் வரையில் பொது வழி பாதையாகத்தான் பயன்படுத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா பி செட்டியூல் சொத்தான வழி பாதையானது வனத்துறை பெயரில் தான் உள்ளது. 09.01.2015-ம் தேதியில் எனது மகன் சோமசுந்தரம் பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஒன்றை பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் தான் என்னிடம் காட்டப்படுவது சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் மேற்படி 09.01.2015 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்படி எங்களுக்கு சொந்தமான சர்வே எண்.253/4இ, சர்வே எண்.253/4எப் ஆகிய சொத்துக்களுடன் இந்த தாவா பொது பாதையான தாவா பி அட்டவணை சொத்து சர்வே எண்.253/3 சொத்தை பொறுத்தும் எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு வனத்துறைக்கு சொந்தமான சொத்தான தாவா பி அட்டவணை சொத்து சர்வே எண்.253/3 பொறுத்து எழுதிகொடுக்கப்பட்ட இந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி சட்டத்திற்கு முரணான வகையில் மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது மகனான 3-ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தி உள்ளதால் என் மீது குற்ற நடவடிக்கையும் சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியும் என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்களின்படி இதுநாள் வரையில் தாவா பி அட்டவணை சொத்தானது வனத்துறை பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த தாவா வழிபாதையானது எல்லோரும் பயன்படுத்தி வரும் பொது வழி பாதை என்றும் அதில் நான் மட்டும் தனிப்பட்ட முறையில் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் தாவா தாக்கல் செய்து எனது பெயரில் ஏற்பட்ட தீர்ப்பின் பேரில் தாவா பொது வழி பாதையில் வாதி அவருடைய வீட்டிற்கும் நிலத்திற்கும் சென்று வருவதை நான் தடுத்ததின் காரணமாகத்தான் வாதி இந்த தாவாவை தாக்கல் செய்ய நேரிட்டது என்றும் அவ்வாறு தடுக்க எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. அதனால் வாதி இந்த தாவாவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் 12.10.2018-ம் தேதியில் வழக்கறிஞர் மூலம் நான் ஒரு சட்ட அறிவிப்பை வாதிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 12.10.2018 தேதியிட்ட சட்ட அறிவிப்பின் சார்வு நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த சட்ட அறிவிப்பிற்கு வாதி தரப்பில் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பி தான் என்னிடம் காட்டப்படுவது சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 25.10.2018-ம் தேதியிட்ட பதிலறிவிப்பின் நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் தவறான சங்கதிகளை

sd/-pownammal

கொண்டு வாதிக்கு சட்ட அறிவிப்பு நான் அனுப்பியது தவறு என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முன்னோர்களும், வாதியின் முன்னோர்களும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதால் தாவா வழிபாதையை எங்கள் முன்னோர்கள் காலத்திலிருந்து பொது வழி பாதையாகத்தான் பயன்படுத்தி அனுபவித்து வந்தார்கள் என்றும் இந்த நிலையில் அந்த பொது வழி பாதையில் வாதி சென்றுவருவதை தடை செய்ய எனக்கு உரிமை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/ pownammal (DW1)

Taken down by me in open court read over of the deponent andacknowledged by her/him to becorrect.

Sd/SenthilKumar.26.02.2019
District. Munsif.